## மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.

## அசல் வழக்கு எண்.15/2018

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி., பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் நாள் செவ்வாய் கிழமை வாதிகள் தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.V.மகேஸ்வரி, இருக்கை எழுத்தர் (நிலை–I) அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயலட்சுமி | கணவர் பெயர் | : | சந்திரகுமார் |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 04.08.2026

**P.W. : 1**

**வாதிகள் தரப்பில் முதல் விசாரணை**

நான் 1ம் வாதி ஆவேன். எனது முதல் விசாரணைக்காக பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். என் தந்தை பொன்னுசாமியின் வம்சாவழி பட்டியல் **வா.சா.ஆ.1** ஆகும். என் தாயார் ரங்கநாயகி பெயரில் 13.11.1967 தேதியில் நாரயணசாமி எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரம் பதிவு நகல் **வா.சா.ஆ.2** ஆகும். என் தாயார் ரங்கநாயகியின் இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ.3** ஆகும். 2ம் வாதி

விஜயலட்சுமி மின்வாரிய செயற்பொறியாளருக்கு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் 06.08.2015 தேதியில் அனுப்பிய மனு அஞ்சலக இரசீதுடன் **வா.சா.ஆ.4** ஆகும். அதற்கு 24.08.2015 தேதியில் மின்வாரிய பொது தகவல் அலுவலர் அனுப்பிய பதில் **வா.சா.ஆ.5** ஆகும். 20.01.2016 தேதியில் 2ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் பதிவு நகல் **வா.சா.ஆ.6** ஆகும். 24.06.2016ம் தேதியில் பிரதிவாதிகளுக்கு நாங்கள் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் அஞ்சலக இரசீதுடன் **வா.சா.ஆ.7** ஆகும். அவற்றை 1, 3, 5 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டதற்கும், ஒரு நபர் பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட அஞ்சலுறை **வா.சா.ஆ.8** ஆகும். தாவா சொத்து தொடர்பாக 01.01.2011 முதல் 26.12.2017 வரை உள்ள வில்லங்க சான்றிதழ் **வா.சா.ஆ.9** ஆகும். 07.09.2015 தேதியில் மின்வாரிய பொது தகவல் அலுவலர் அனுப்பிய பதில் மற்றும் அதனுடன் வந்த இணைப்புகள் **வா.சா.ஆ.10** வரிசையாகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

**(வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.